26 வது ஆண்டு விழாவை முன்னிட்டு
அரைச்சலார்
28-6-65 முதல்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU
தேசீய தினசரி National Tamil Daily
மலர் 7 (25-8-65) இதழ் 194
விசுவாவசு ஆவணி 9 ரபி: ஆகிர் பிறை 27 புதன்கிழமை

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12 போன்: 5830

போர்நிறுத்த கோட்டில்

# இந்திய-பாக். படைகள் மோதல்

## கடும் சண்டைக்குப்பின்னர் பாக். துருப்புகள் பின்வாங்கின

ஸ்ரீநகர், ஆக. 24

கடந்த இரு தினங்களாக ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்கில் நிகழ்ந்த புதிய சம்பவங்களைத் தொடர்ந்து இங்கு நிலைமை மோசமாகியிருக்கிறது.

போர்நிறுத்தக் கோட்டைக் கடந்து இந்தியப் பகுதிக்குள் நுழைந்த பாகிஸ்தான் துருப்புகளுக்கும் இந்திய பந்தோபஸ்து படைகளுக்குமிடையே நடைபெற்ற கடும் சண்டையைத் தொடர்ந்து பாகிஸ்தான் துருப்புகள் விரட்டியடிக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்முகாஷ்மீரில் நிலைமை திருப்திகரமாகவில்லை என்று செய்திகள் கூறுகின்றன. யுத்த நிறுத்தக் கோட்டை கடந்த பாகிஸ்தான் துருப்புகள் மேற்கொண்டிருக்கும் முயற்சிகளிலிருந்து புதிய சம்பவங்கள் எதுவும் இங்கு நிகழலாம் என்று பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

யுத்தநிறுத்தக் கோட்டைக் கடந்த பாகிஸ்தான் துருப்புகளுக்கும் இந்திய துருப்புகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் பாகிஸ்தான் தரப்பில் பலர் மாண்டிருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. போர்நிறுத்தக் கோட்டைக் கடந்து பாகிஸ்தான் துருப்புகளிடம் இலேசுரக பீரங்கிகளும் இயந்திர துப்பாக்கிகளும் இருந்தன. இந்திய துருப்புகள் ஏராளமான வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

### சாஸ்திரி அறிவிப்பு

இன்று ராஜ்யசபையில் நடைபெற்ற கட்ச் ஒப்பந்த விவாதத்துக்குப் பிரதமர் சாஸ்திரி பதிலளித்துப் பேசுகையில் காஷ்மீர் சம்பவங்கள் குறித்து தெரிவித்தார்.

''காஷ்மீரில் பாகிஸ்தான் பெரியதொரு திட்டமொன்றை வகுத்திருக்கிறது. இத்திட்டம் நீண்ட நாட்களுக்கு இருக்கலாம். காஷ்மீரில் நாம் மேற்கொள்ளவிருக்கும் அடுத்த நடவடிக்கை; பாகிஸ்தான் அங்கு அடுத்தபடியாக என்னசெய்யும் என்பதையே பொறுத்திருக்கும்'' என்றும் பிரதமர் சாஸ்திரி கூறினர்.

பல்கலைக்கழக கல்வி

## 400 தமிழ்மாணவருக்கு பேராதனையில் இடம்கிடைக்கும்

யாழ்ப்பாணம், புதன்

இந்த வருடத்தில் பல்கலைக்கழகங்களில்கல்விபயில்வதற்குத் தகுதி பெற்றிருக்கும் 4,042 மாணவர்களில் 1500 பேருக்கு கொழும்பு, பேராதனையிலுள்ள பல்கலைக் கழகங்களில் இடம் கிடைக்கும் என அறியப்படுகிறது. பல்கலைக் கழகங்களில் சேருவதற்கு (கலைப்பிரிவில்) அனுமதி பெற்ற 400 தமிழ் மாணவர்களுக்கும் பேராதனைப்பல்கலைக்கழகத்திலேயே இடம் கிடைக்குமென நம்பப்படுகிறது.

காலி, குருநாகலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல்கலைக்கழக பிரிவுகள் திறக்கப்படும் என்று முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்த பொழுதிலும் இந்த இடங்களில் பல்கலைக்கழகப் பிரிவுகள் திறக்கப்பட மாட்டாதெனத் தெரியவருகிறது. போதிய தகுதியுள்ள ஆசிரியர்கள் இல்லாததும் இதற்கு ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

## எட்டு அடி நீளப்பாம்பு பொலிசார் சுட்டனர்

காங்கேசன்துறை, செவ்,

காங்கேசன்துறையிலுள்ள திரு. ஹமீட் என்பவரின் வீட்டில் இன்று பகல் 12 மணிக்கு 8 அடி நீளமுள்ள ஒரு இராட்சத பாம்பொன்றை காங்கேசன்துறைப் பொலிசைச்சேர்ந்த திரு. கருணநாயக்கா துப்பாக்கியால் சுட்டுக் கொன்ருர். இப்பாம்பை அநேக மக்கள் நேரில் வந்து பார்வையிட்டனர், அந்த வீட்டுக்காரரை விசாரித்த பொழுது இரண்டு தினங்களுக்கு முன்னர் இதைவிட சிறிய பாம்பொன்றை அடித்துக் கொன்[illegible]ஞர்.

## சாவகச்சேரிக்கு மந்திரி விஜயம்

சாவகச்சேரி, செவ்.

சுகாதாரமந்திரி திரு எம். டி. ஏச். ஜெயவர்தன அடுத்த மாதம் 15ந் திகதி உத்தியோக பூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் பொழுது சாவகச்சேரித்தொகுதியிலும் உத்தியோகபூர்வமான முறையில் அரை நாளைக்கழிப்பார். அப்பொழுது அவர் அரசினர் மருத்துவமனை, மருந்துச்சாலை முதலிய இடங்களையும் பார்வையிடுவார்.

## புதியபஸ் சேவைகள்

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி ஊடாக இராமநாதபுரத்துக்கும், கிளிநொச்சியிலிருந்து பரந்தன் ஊடாக பூநகரிக்கும் இலங்கைப்போக்குவரத்துச்சபை பஸ்சேவைகளை ஆரம்பித்துள்ளது. இச்சேவைகள் தொடர்ந்து நடைபெறுமென தெரியவருகிறது. மேற்படி சேவையை கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

## எறிகுண்டு விபத்து

புத்தளம், செவ்.

எறிகுண்டு வெடித்ததைத் தொடர்ந்து இங்கு மூவர் காயங்களுக் குள்ளானுர்கள். முகமது கமீது, (14) முகமது செகு, (20) முகமது செய்யது, (5) ஆகிய இம்மூவரும் சிலாபம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். கமீது, செகு ஆகிய இருவரின் நிலைமை மிகவும் மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பின்ஹோா விமானத் தளத்தை வியட்காங்கியர் தக்கினர்

### வடவியட்னும் மீது தொடர்ந்து குண்டுமாரி

சைகோன், ஆக. 24

சைகோனின் வடகிழக்கே இருக்கும் அமெரிக்காவின் பின்ஹோா விமானத் தளத்தை நேற்று வியட்காங் கொரில்லாக்கள் பீரங்கிகளால் தாக்கினர்.

இதற்கிடையே வடக்கு வியட்னுமில் அமெரிக்க விமானங்கள் நேற்றுமேலும் தாக்குதல்கள் நடத்தி நீர் மின்சார நிலையமொன்றையும் மற்றும் பல கட்டடங்களையும் நாசமாக்கியுள்ளனர்.

தென்வியட்னுமில் வியட்காங் கொரில்லாக்கள் கூட்டாக இருக்கும் ஒரு இடத்தில் நேற்று அமெரிக்க தென்வியட்னும் விமானங்கள் தாக்குதல்கள் நடத்தின. இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரம் குறித்து உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

## 'ஒழுக்கத்தை நிலைநாட்ட சங்கங்கள் உழைக்கவேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை சைவப் புலவர் அலுவலகத் திறப்பு விழாவும் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலிருக்கும் இளையதம்பி கட்டிடத்தில் யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். ஸி. மகாதேவா தலைமையில் நடைபெற்றது. அவர் சங்க அலுவலகத்தை திறந்துவைத்துப் பேசுகையில், இன்றைய நிலையில் மக்களிடையே சமய உணர்ச்சியையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டுவதற்கு இதுபோன்ற சங்கங்கள் உழைக்கவேண்டுமென்றும் சைவப் புலவர் சங்கம் ஐந்து ஆண்டுகளுக்கிடையில் பல்வேறு இடங்களில் அரிய பெரிய சாதனைகளை ஏற்படுத்திய தோடமையாது தனக்கென ஓர் அலுவலகத்தையும் தற்போது ஏற்படுத்திக்கொண்டதையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

அலுவலகத்தைக் கொடுத்துதவிய திரு. இ. வைத்தியலிங்கம் உரையாற்றுகையில் சைவப்புலவர் சங்கம் நாவலப்பிட்டி, மட்டக்களப்பு போன்ற இடங்களில் பல சேவைகளைச் செய்திருப்பதோடு வருடாவருடம் சைவப் புலமை பெற்றவர்களை நாட்டில் உற்பத்தியாக்கிவருவதைப் போற்றவேண்டும். சைவநன்மக்கள் யாவரும் தங்களால் இயன்ற உதவிகளை இச்சங்கத்திற்குக்கொடுத்து மேலும் இதனை ஊக்கமடையச்செய்யவேண்டும்'' என்றும் குறிப்பிட்டார்.

சைவப்புலவர் த. குமாரசாமிப்பிள்ளை, திரு. கே. பி. ஹரன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

'இந்துசாதனம்' ஆசிரியர் சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம் உரையாற்றுகையில் ''சைவப்புலவர் சங்கம் நன்னிலத்திலே பிறந்து வளர்ந்து பருவமெய்தித் தற்போது மாசில்லாத மனையாட்சியைப் பெற்றிருக்கின்றது. தொடர்ந்து இச்சங்கம் நன்மக்கட்பேருகிய கிளைச்சங்கங்களையும் அடையவேண்டும்'' என்ருர்.

சங்கத் தலைவர் சைவப் புலவர் வித்துவான் திரு. வ. செல்லையா பேசுகையில், சங்கம் செய்த, செய்துவருகின்ற சேவைகளைக் குறிப்பிட்டதோடு, திரு. இ. வைத்தியலிங்கத்தின்சேவையைப் பாராட்டி அன்னரின் உதவி மேலும் இச்சங்கத்திற்கு வேண்டியிருப்பதைக் குறிப்பிட்டார்.

சங்கச்செயலாளர் சைவப் புலவர் திரு. ச. சச்சிதானந்தம் நன்றியுரைகூறினர்.

சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:- சைவப் புலவர் வித்துவான் திரு. வ. செல்லையா. காரியதரிசி:- சைவப் புலவர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை. உப காரியதரிசி:- இளஞ் சைவப் புலவர் திரு. க. சிற்றம்பலம். பொருளாளர்:- சைவப் புலவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி. உப பொருளாளர்:- சைவப் புலவர் பண்டிதை கு. மனேன்மணி. பரீட்சைக் காரியதரிசி:- சைவப் புலவர் திரு. இ. செல்லத்துரை. உப பரீட்சைக் காரியதரிசி:- சைவப் புலவர் திரு. சு. செல்லத்துரை. சங்கப்புரவலர்:- திரு. இ. வைத்தியலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நமக்குள் அடங்கி இருக்கும் ஆனந்தம், சாந்தி, அன்பு இவற்றை மலரச் செய்ய ஒரு ஞானியின் கூட்டுறவு அவசியமாகும். அவரது தெய்வீக ஜோதி நமது உள்ளத்திலுள்ள இருளை நீக்கி, நமக்குள் இருக்கும் ஆனந்தத்தை உணர்ந்து அனுபவிக்கச் செய்கிறது.

— சுவாமிராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 9 உ (25-8-65)


## லாபத்தில் தொழிலாளருக்குப் பங்கு

வர்த்தக, கைத்தொழில் ஸ்தாபனங்களில் கிடைக்கும் லாபத்தில் ஒருபகுதியை ஊழியர்களுக்குப் பங்கிட்டு அளிக்கும் கொள்கையை ஆங்கீகரிக்குமாறும் இது பற்றி விசாரித்து புதிய சட்டங்களைத் தயாரிக்க ஏழுபேரடங்கிய ஒரு கமிஷனை நியமிக்குமாறும் தொழில்மந்திரி அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகக் கிடைத்துள்ள செய்தி வரவேற்கத்தக்கதாகும்.

வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து நிதி மந்திரி செய்த பிரசங்கத்தில் தொழிலாளருக்கும் வர்த்தக, கைத்தொழில் ஸ்தாபனங்களில் பங்கு அளித்து, நிர்வாகத்தில் அவர்களும் கலந்து கொள்ளக் கூடிய வகையில் சட்டதிட்டங்கள் செய்யப்படுமென்று அறிவித்தார். இவ்வித ஏற்பாடுயூகோஸ்லேவியா போன்ற சில சமதர்ம நாடுகளில் வெற்றிகரமாக நடைபெறுவதாகத் தெரிகிறது. ஆனால் மேற்குறித்த கொள்கையை அறிவித்துள்ள அரசாங்கம் தொழில் அமைச்சரின் உத்தேச யோசனைகளுக்கு உடன் அங்கீகாரமளித்து, இதுபற்றிய கமிஷனை நியமிக்குமென்றே எதிர்பார்க்கலாம்.

இன்று பொதுவாக தொழில் துறையில் அமைதியில்லை. எந்த நிமிஷமும் வேலைநிறுத்தம் முதலிய சங்கடங்கள் ஏற்படலாம். தொழிலாளர் பிரச்னைதான் கைத்தொழில் முன்னேற்றத்துக்கு முக்கிய தடையாக இருக்கின்றது. இதேபிரச்னையால் பல தொழில்கள் மூடப்படவும் நேரிட்டுள்ளது. இந்தப் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, தொழிலாளரின் பூரண ஒத்துழைப்பைப் பெற்றால்தான் எந்தத் தொழிலிலும் தொழில் அமைதி நிலவி, அபிவிருத்தி ஏற்பட முடியும். அதற்கு ஒரேவழி தொழிலாளருக்கு நிர்வாகத்திலும் லாபத்திலும் பங்கு அளிப்பதுதான். இதனல் அவர்களுக்கு தொழிலில் உண்மையான அக்கறை பிறக்கும். தங்களுக்குத் தொழிலில் உண்மையிலே பங்கும் உரிமையும் உண்டென்று கண்டால் அவர்கள் அதிக உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் வேலை செய்யலாம். நிர்வாகிகளுக்கும், ஊழியருக்கும் அதிக நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டு, பரஸ்பர நல்லுறவும் ஒத்துழைப்பும் வளரவும் இந்தப் புதிய ஏற்பாடு வகை செய்யக் கூடும்.

ஆனல் இன்றைய நிலையில் பங்குகளை விலைக்கு வாங்கும் வாய்ப்பு தொழிலாளருக்குப் பொதுவாக இல்லை. வாழ்க்கைச் செலவுகளும், தரமும் அதிகரிப்பதால் வாங்கும் சம்பளத்தில் கடன் படாமல் அவர்கள் வாழ்க்கை நடத்துவதே பெரிய காரியம். ஆகவேகிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியைத் தொழிலாளருக்கு ஒதுக்கி அப்பணத்துக்கு பங்குகளை அவர்களுக்கு விற்பதாயின், இது ஓரளவு நிறைவேறக் கூடும். விசேஷ போனஸ்களை வழங்கி, அப்பணத்தைப் பங்குகளாக மாற்றலாம். தொழிலாளர் பிரதிநிதிகளின் கருத்தை அறிந்து அவர்களுக்கு வசதியான முறையில் கமிஷன் இது பற்றித் தீர்மானிக்கலாம்.


இந்தப் புதிய ஏற்பாட்டைச் செய்வதிலே அனுபவத்தில் சில சங்கடங்கள் இருக்கக்கூடும். என்றாலும் தொழிலின் வெற்றிக்குத் தொழிலாளரின் உழைப்பும், மூலதனத்தைப்போல் அதிக முக்கியமானதென்பதை, மறக்கமுடியாது. தொழிலாளர் சமூகம் கேவலம் 'சம்பளக் கூலி'களாக இருக்க விரும்பவில்லை. தாங்கள் உழைக்கும் தொழில் ஸ்தாபனங்களில், தங்களுக்கும் பங்குண்டென்பதையும், லாப நஷ்டம் தங்களையும் பாதிக்கும் என்பதையும் கண்டால், அவர்கள் அதிக கவனத்துடனும் புதிய உற்சாகத்துடனும் தங்கள் பூரண திறமையையும் பயன்படுத்தி உழைக்கக்கூடும். அனுவசியமான வேலை நிறுத்தங்களிலும், கிளர்ச்சிகளிலும் அவர்கள் ஈடுபடமாட்டார்கள். தொழில் அமைதி ஏற்பட்டு, தொழில்கள் வளருவதற்கும் நாடு முன்னேறுவதற்கும் இதனல் ஓரளவு வழிபிறக்கவும் கூடும். இதில் பல தடைகள் ஏற்படக் கூடும். என்றாலும் இந்த நல்ல ஏற்பாட்டை, வீண் தவக்கம் செய்யாமல், பிற நாடுகளின் அனுபவங்களைக் கவனித்து கூடிய சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டுவருவது பலவிதங்களிலும் நல்லதாகும்.

## விருத்தி அடையும் இந்திய அரசாங்கம்

பொன், ஆக. 24

இந்தியாவின் 4-வது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு பிரதான கனரகப் பொருட்களை ஏற்றுமதி செய்யும். அதற்குப் பதிலாக இந்தியாவின் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களைப் பெருமளவு இறக்குமதி செய்யும்'' என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வர்த்தகஅமைச்சின் டைரக்டர் திரு. டொட்மன் கூறினர்.

இரு நாடுகளிடையே வர்த்தகம் 1964-ல் ரூபாய் இருபத்தியொன்றரைகோடியாக இருந்ததென்றும் இவ்வருடம்அது 23கோடி ரூபாயாக உயருமென்றும் 1970ம் ஆண்டில் இத்தொகை இரு மடங்காகி விடுமென்றும் அவர் தெரிவித்தார்.



## நல்லூர்க் கந்தனே!

அளவையூர் சஞ்சீவி அருட்கவி சீ. விநாசித்தம்பி
அவர்களால் ஆக்கப்பெற்றது

தவமுடைய மெய்யன்பர் கவலைகள் தீர்த்திடும்
சச்சிதானந்த முருகா
தங்கச்சிலம்பழகி மங்கையுமை தழுவிடச்
சண்முகம் கொண்டமுருகா
புவனமதில் ஆறுபத் தறுகோடி தீர்த்தமும்
பொங்கிநிறை சரவணத்தில்
புனிதமிகு கார்த்திகைத் தாயரின் பாலமுது
புசித்திட்ட பால முருகா
நவ வீர துணைவரை நயந்த முருகா தேவர்
நலமெய்த வந்த முருகா
நமசிவய மூலமெனும் ஞான முருகா சோதி
நல்குசுக வாழ்வு தருவாய்
சிவவடிவ வேலோடு தெய்வகுஞ்சரி வள்ளி
திருமருங்கழகு செய்யச்
சித்திரப் பொற்பதும ரத்நரத மேறிவரும்
செல்வ நல்லூர்க் கந்தனே.

## நல்ல முருகனின் எல்லையில் கருணை

தமிழ்ப்பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர்

அருவமும் உருவுமாகி யனதி
யாய் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்றசோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங்
கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனனுலகமுய்ய.

ஒப்பற்ற முருகன் உலகின்கணுள்ள ஆன்ம கோடிகளை உய்விக்க அவதரித்தார் என்பது இக்கலியுகத்தில் கண்கூடாகக் கண்ட உண்மையாகும். பாரத நாட்டில் ஆறுபடைவீடுகள் முருகனுக்கு இருக்கின்றன. எங்கள் நாட்டிலும் ஆறுபடைவீடுகளுள்ளன. கதிர்காமம் என்றால் பாவவேர் அற்றுவிடும். புவனேகவாகு நல்லூர் எம்பெருமானுர்க்கு நல்லவாறே கோயில் கட்டி வைத்தமை சரிதம். கதிர்வேற்பெருமானின் அருள் பொங்கித் ததும்பி ஏகவுருவாய் இருக்கின்றதே! ஆ! பெருமானின் அருள் மகிமை தானென்னே! சைவப்பெருநெறி மக்காள்! விட்டு விடப் போகுதுயிர். விட்டவுடனே உடலைச் சுட்டுவிடப் போகிறர் சுற்றத்தார். புன்புலால் யாக்கைக் குவன் புலாலிடாது தூயராய்ச் சேருங்கள். நல்லை நகரின் சொல்லருஞ்சிறப்பை விழா வணியைச் சேவிக்க வாருங்கள். முருகப்பெருமான் ஆறுமாமுகங்களோடு அளிக்குங் காட்சியை இம்முறை தவறவிட்டால் பின் எப்பிறவியிற் கிடைக்கும்? அன்பர்களே! குறுக்குவழியிற் செல்லாதீர்கள்! சிவமும் சத்தியும் முருகன்தான். முருகன் திருக்கரவேலும் பேரருட்சத்தியே. அசுரர்களாகிய இருளில் மூழ்கிய தேவர்களை அவ்விருட்கடலைப் பிளந்து ஒளியாகிய அருளைப் பொழிந்தது வீரவேல். அது சகல பாவங்களையும் போக்கி மேலாம் நன்னெறி காட்டும். சத்தியம்; சத்தியம்!! முக்காலுஞ் சத்தியம்!!!

''வீரவேல் தாரைவேல்
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள்
திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல்
சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவேலுண்டே துணை

அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று வடிவங்கள் சிவபிரானுக்கு உண்டு, சோதிப் பிழம்பே முருகனின் தடத்த வடிவமாயிற்று.

சோதியாக விளங்குவதும் அநாதியாகவுள்ளது. இருளும் அநாதியாகவுள்ளது. ஆனல், ஒளியைக் கண்டால் இருள் மறைவது பிரத்தியக்ஷமே. வேதம் பிர்மம் என்று கூறும். அதனையே ''பிரமமாய் நின்ற சோதி'' என்று கச்சியப்ப சிவாசாரியர் அருளிச் செய்தார். காட்சிக்குரிய ஆறுமாமுகவடிவைப் பின்வருமாறு நக்கீரனர் விளக்கினர். சிவனுமைக்கு இனிய மைந்தன் குமரநாயகன். முதிர்ச்சியடையாது என்றும் ஒரே பெற்றித்தான் இளமையும் அழகும் முருகனுக்கே அமைந்தன. முருகப் பெருமான்,

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கிளிநொச்சி மகாதேவ ஆசிரமத்திலிருந்து ஓர் அன்பழைப்பு கிடைத்தது. அங்கு மகாதேவ சுவாமிகளின் ஜயந்தி விழாவும், ஆசிரமத்தின் 8-வது ஆண்டு விழாவும் நடப்பதாகவும் அதற்கு வருமாறும் கேட்டிருந்தனர்.

தினசரி குப்பை கூளச் செய்திகளையே படித்துப் படித்து நிம்மதியை இழக்க வேண்டியுள்ளது. அதிலும் காஷ்மீர்ச் செய்திகளைப் படிக்கும்போது மிக வேதனை. இதையெல்லாம் மறந்து சற்றே நிம்மதியான ஒரு மாறுதலும் ஆறுதலும் கிடைக்குமென்ற ஆவலில் அங்கு சென்றேன்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த ஒரு குளிர்தரு அது. அங்கு வடிவேல் சுவாமிகளும், நல்லதம்பியும் செய்துவரும் மேலான தொண்டுகளைப்பற்றி முன்பே இப்பத்திகளில் எழுதிய நினைப்பு.

சில மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் பகல் 2மணி இருக்கும். சூறுவளி கஷ்ட நிவாரண விஷயமாக சில அன்பர்களுடன் உருத்திரபுரம் சென்றுவிட்டு வழியில் அந்த ஆசிரமத்துக்கு வந்தோம். நல்ல பசி. சுவாமி மலைநாட்டில் சமயத்தொண்டுசெய்யச் சென்றிருந்தார். ஆசிரமத்தில் எல்லோரும் சாப்பிட்டு முடிந்தது. எங்களைக் கண்டதும், அன்பே வடிவான அன்னை அவர்கள் எல்லாரையும் சாப்பிடச்சொன்னர். முன் அறிவிப்பு அளிக்காமல் சென்றிருந்தும், எங்களில் ஐந்தாறு பேர்களுக்கும் அன்புடன் அறுசுவை உணவு அளித்ததைக்காண மிக வியப்பாக இருந்தது.

வருகிற அதிதிகளுக்கு எப்போதும் அங்கு உணவுண்டாம். பசியான்றும் இப்பணிதானே உண்மையான தமிழ்ப்பண்பு! உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கச் சொலலுகிறது இந்த மனம்.

ஃ ஃ ஃ

உற்சாகமுள்ள ஒரு தமிழ் வாலிபர். எஸ். எஸ். ஸி. பாஸ் செய்தவர். இ. போ. ச. வில் கண்டக்டராகக் கடமையாற்றுகின்றர். அந்த ஆசிரமத்துக்கு அடிக்கடி வந்து தொண்டு செய்து சுவாமியின் அருளாசியைப் பெற்றதன் பயனுக, தமக்கு வேலையும் பல நன்மைகளும் கிடைத்துள்ளதாயும், மேலும் பல படித்த வாலிபர்களுக்கு, சுவாமியின் ஆசியால் வேலைகள் கிடைத்துள்ளதாகவும் நன்றியுடன் தெரிவித்தார்.

படித்த வாலிபர்களின் வேலையில்லாப்பிரச்னையை எப்படித் தீர்க்க முடிகிறது என்று சுவாமிகளைக் கேட்டதற்கு, ''எல்லாம் கொடுக்கவல்ல அந்த வள்ளலை நம்பினல் என்னதான் கிடைக்காது?'' என்றார். வேலையில்லாமல் சங்கடப்படும் படித்த தமிழ் வாலிபர்களுக்கு ஒரு சின்ன யோசனை. உண்மைத் தொண்டுசெய்யத் தயாராக இருப்பவர்களுக்கு அங்கு எவ்வளவோ வாய்ப்புண்டு. ஆனல் கூலிக்காரர்களாகவும், சம்பள அடிமைகளாகவும் தங்களைச் செய்து கொள்ளத்தான் படித்த பல வாலிபர்களும் முற்படுகின்றர். ஒரு சின்ன வேலை காலியாயிருக்கிறதென்று விளம்பரப்படுத்தினல்இருபதாயிரம் பேர் போட்டா போட்டியுடன் மனுச்செய்கிறர்கள்.

மக்களுக்கு அன்புத்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்கில் புதியசண்டை

## ஓரேநாளில் 60 பாகிஸ்தானியர் பலி

### போர் நிறுத்த கோட்டை தொடர்ந்து தாண்டுகிருர்களாம்

ஸ்ரீநகர், ஆக. 24

கடந்த இருபத்திநான்கு மணிநேரத்தில் ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்கின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற புதிய சண்டைகளில் அறுபதுக்கு மதிகமான பாகிஸ்தானிய தாக்குதல் காரர்கள் கொல்லப்பட்டனர் என்றும் இந்தியத் தரப்பில் சேதமெதுவுமில்லை என்றும் இன்றுகாலை அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானிய ஊடுருவல் காரர்கள் போர் நிறுத்தக் கோட்டைத் தொடர்ந்து தாண்டி வருவதாக இன்று கடைசியாக கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

**புதிய சண்டைகள்**

ஓரிரு தினங்களாக சண்டைகள் நடைபெருத ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்கில் நேற்று இந்திய பந்தோபஸ்து படைகளுக்கும் பாகிஸ்தானிய தாக்குதல் காரர்களுக்குமிடையே புதிய சண்டைகள் ஆரம்பமாயின. காஷ்மீரில் ஒரு பொலிஸ் நிலையத்தின் மீதும் ஜம்முவில் மற்றுமொரு பொலிஸ் நிலையம் மீதும் தாக்குதல் காரர்கள் நேற்று அதிக நேரம் வரை துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். ஆனால் பின்னர் இவர்கள் இந்தியப் படைகளினால்விரட்டியடிக்கப் பட்டனர்.

**பாலத்தை தாக்க முயற்சி**

மற்றுமொரு இடத்தில் பாலமொன்றை காவல் செய்த இந்திய துருப்பு ஒருவர் மீது பாகிஸ்தானிய தாக்குதல் காரர்கள் பலமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். இதனைத் தொடர்ந்து இந்திய படைகளுக்கும் அவர்களுக்குமிடையே நடைபெற்ற கைகலப்புகளில் இருபது பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்.

மற்றுமொரு பகுதியில் நிகழ்ந்த கைகலப்புகளில் பத்து பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டனர். கடந்த இருபத்தி நான்கு மணி நேரத்திலும் பள்ளத்தாக்கின் பல பகுதிகளிலும் நிகழ்ந்த சண்டைகளில் அறுபதுக்கும் அதிகமான பாகிஸ்தானிய தாக்குதல் காரார்கள் மாண்டிருக்கிருர்கள் என்று ஸ்ரீநகர் செய்திகள் கூறுகின்றன.

**திரும்பி ஓடினர்**

காஷ்மீர் பள்ளத்தாக்கில் போர் ஒய்வுக் கோட்டை மீண்டும் பாகிஸ்தானியர்கள் கடந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று ஏராளமான பாகிஸ்தானிய தாக்குதல் காரர்கள் போர் ஒய்வுக் கோட்டை கடந்து ஜம்மு காஷ்மீருக்குள் நுழைந்தனர் என்றும் இதனைத் தொடர்ந்து இந்திய பந்தோபஸ்து படைகளுக்கும் அவர்களுக்குமிடையே பலமான கைகலப்புகள் நடைபெற்றன என்றும் கடைசியில் பாகிஸ்தானிய தாக்குதல் காரர்கள் பின்வாங்கி ஓடிவிட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**பத்திரிகைகள் அபிப்பிராயம்**

நேபாளத்திலிருந்து வெளியாகும் மூன்று பிரபல பத்திரிகைகள், காஷ்மீர் சண்டையில் இந்தியாவை ஆதரித்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் நெறிகளை பாகிஸ்தான் அசட்டை செய்து விட்டது என்றும், இந்தியாவின் பகுதியிலுள்ள ஜம்மு காஷ்மீரில், பாகிஸ்தான் முழு அளவில் ஆக்கிரமிப்பு நடத்தியிருக்கிறதென்றும் இந்தப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

ஆசியாவில் மட்டுமின்றி உலக சமாதானத்துக்கும் பாகிஸ்தான் கேடுவிளைவித்து வருகிறதென நேபாளத்திலிருந்து வெளியாகும் ஒரு சஞ்சிகை அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதற்கு பாகிஸ்தானே, முழுப் பொறுப்பு என்று ''நியுயோர்க் டைம்ஸ்'' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது. பீகிங்குடன் பாகிஸ்தான் நட்புறவு கொண்டதன் மூலம் ஆசியாவின் பகுதிகளில் நெருக்கடிகள் தோன்றியுள்ளன என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது,

பாகிஸ்தானின் இணக்கத்துடன் தான் ஊடுருவல்கள் இங்கு நிகழ்ந்திருக்கின்றன என்றும் ஜம்மு காஷ்மீர் பகுதியில் புதிய தாக்குதல்கள் நடைபெற்று வருவதற்கு பாகிஸ்தான் மறைமுகம் என்றும் பிரிட்டனிலிருந்து வெளியாகும் ''டெயிலி டெலிகிராப்'' என்ற பத்திரிகை அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

## மாபெரும் நிலச் சீர்திருத்தம்

பெர்லின், ஆக. 24

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் நடைபெற்ற நிலச்சீர்திருத்தம் ஜெர்மன் விவசாயிகளின் வரலாற்றிலேயே மாபெரும் மக்கள் இயக்கமாகும்.

பெரிய நிலச்சுவான்கள் நாஸிகள், யுத்தக் குற்றவாளிகள் ஆகியோரிடமிருந்து சுமார் 3 லட்சம் ஏக்கர் நிலம் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றில் சுமார் ஐந்தேகால் லட்சம் ஏக்கர் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. விவசாயிகள் அனேவரும் விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்துள்ளார். இந்நாட்டில் 16,000 விவசாயக்கூட்டுறவுச் சங்கங்கள் உண்டு, அரசாங்கத்திற்குச் சொநதமான 600 பண்ணைகள் இருக்கின்றன. இதனுல் உற்பத்தி ஆச்சரியப்படத்தக்க முறையில் அதிகரித்துள்ளது.

## "புதிய திட்டங்களை பாகிஸ்தான் மேற்கொள்ளலாம்"

### எதற்கும் தயார் என்கிருர் சாதிக்

ஸ்ரீநகர், ஆக. 24

காஷ்மீர் பள்ளத்தாக்கில் தோல்விகண்டுவரும் பாகிஸ்தான் தாக்குதல்காரர்கள் இன்னும் சில நாட்களுக்குள் உரிய பலனை அடைந்து விடுவார்கள் என்று காஷ்மீரின் முதன் மந்திரி சாதிக் அறிவித்துள்ளார்.

தாக்குதல்காரர்களுக்குப் பக்கபலமாக இருந்துவரும் பாகிஸ்தான், இனிமேல் புதிய திட்டங்களைத் தீட்டலாம். ஆனால் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புகளைச் சமாளித்து வெற்றி காண. ஜம்மு-காஷ்மீர் இப்பொழுது தயாராகவிருக்கிறது என்றும் சாதிக் எச்சரிக்கை விடுத்தார்.

''படை பலத்தை படைபலம் மூலம்தான் சமாளிக்கலாம். படைபலம்மூலம் தாக்குதல்காரர்களை விரட்டியடிப்போம்'' என்றும் திரு. சாதிக் தெரிவித்துள்ளார்.

## மாலைதீவுக்கு அங்கீகாரம்

மாலைதீவு. ஆக. 24

மாலைதீவை ஒரு சுதந்திர ஆதிபத்திய நாடாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு அங்கீகரித்துள்ளது. அதற்கு சினேகபூர்வமான ஒத்துழைப்பு அளிக்கவும் குடியரசு தயாராக இருக்கிறது.

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசின் பிரதமர் திரு. விலிஸ்டொப் மாலைதீவு பிரதமர் ஜனுப் இப்ராகீம் நாசருக்கு அனுப்பியுள்ள ஒரு வாழ்த்துச் கடிதத்தில் மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளகர்.

## குழந்தைகளின் கடிதத் தொகுப்பு

டோக்கியோ, ஆக. 24

ஹிரோஷிமா நகரில்அணுகுண்டு வீசியதுபற்றி தங்களின் கருத்துகளையும் அனுபவங்களையும் குறிப்பிட்டு ஜப்பானியக் குழந்தைகள் எழுதிய கடிதங்களை எல்லாம் ஒன்றுசேர்த்து ''ஹிரோஷிமாக் குழந்தைகள்'' என்ற பெயரில் ஒரு கடிதத் தொகுப்பு பெர்லினில் வெளியிடப்பட்டுள்ளது?

1945 ஆகஸ்டில் ஹிரோஷிமா, நாகாசாகி நகரங்கள் மீது அணுகுண்டுகளை வீசியதால் அமரரானவர்களுக்கு இந்த நூல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

## ஹிரோஷிமா தினம்

பெர்லின், ஆக. 24

20 ஆண்டுகளுக்கு முன்பு ஹிரோஷிமா நகரம் அமெரிக்க அணுகுண்டால். நாசமானதை நினைவுபடுத்துவதற்காக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் சமாதான சபையின் விசேஷ கூட்டமொன்று இங்கு நடைபெற்றது.

இக்கூட்டம் ஹிரோஷிமா நகர மேயருக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில்அணுகுண்டால் ஹிரோஷிமா, நாகசாக்கி நகரங்களுக்கு ஏற்பட்ட நஷ்டமும், ஜப்பானிய மக்களின் அந்த மகத்தான தியாகமும் உலக சமாதானத்துக்கு தொடர்ந்து போராட வேண்டுமென்பதையே வற்புறுத்துகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

''அணு. ஜலஜ குண்டுகளை தடுப்பதற்காக ஜப்பான் நடத்தும் போராட்டத்தில் நாங்களும் சேர்ந்து கொள்கின்ருேம்'' என்று இச் செய்தி மேலும் கூறுகிறது.

## சர்வதேச சிரமதான இயக்கம்

பெர்லின். ஆக. 24

ஜெர்ான் ஜனநாயகக்குடியரசில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வதேச சிரமதான இயக்கத்தில், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட 11 நாடுகளைச் சேர்ந்த 30 வாலிபர்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்த இயக்கம் இங்குள்ள வாலிபர் இயக்கத்தாலும், சர்வதேச சிவில் சேவை ஸ்தாபனத்தாலும் நடத்தப்படுகிறது. இதர நாடுகளில் நடைபெறும் சர்வதேச சிரமதான இயக்கங்களுக்கு தொண்டர்களை அனுப்பி வைக்கவும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் வாலிபர் சங்கம் முன்வந்துள்ளது.

## 122 இந்தியத் துருப்புகள் மாண்டதாக "காஷ்மீர் குரல்" வானெலி அறிவிப்பு

### "வெற்றி கிடைக்கும்வரை விடுதலை வீரர்கள் தொடர்ந்து போரிடுவர்" ---புரட்சி சபை

ராவல்பிண்டி, ஆக. 24

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவிலிருந்து நேற்று இரவு வரை ஜம்முகாஷ்மீர் பள்ளத்தாக்கின் பல பகுதிகளிலும் நடைபெற்ற சண்டைகளில் நூற்றிஇருபத்திரண்டு இந்தியத்துருப்புக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று "காஷ்மீர் வானெலி" அறிவித்துள்ளது. "காஷ்மீர் விடுதலை இயக்கத்தினரின் இச் சுதத்திரப் போராட்டம் நிற்கமாட்டாது என்றும் வெற்றி கிடைக்கும் வரை அவர்கள் போராடுவார்கள்" என்றும் காஷ்மீர் புரட்சிசபை நேற்று இரவு அறிவித்தது.

''காஷ்மீர் விடுதலை இயக்கத்தினருக்கும் இந்திய பந்தோபஸ்து படையினருக்குமிடையே புதிய சண்டைகள் ஆரம்பித்திருக்கின்றன. நேற்று இரவு முதல் இன்று இரவு வரை நடைபெற்ற சண்டைகளில் மட்டும் இந்தியத்தரப்பில் 122 பேர் மாண்டனர்'' என்று நேற்றிரவு ''காஷ்மீர் குரல்'' வானெலி அறிவித்தது.

வடக்கு பாராமுல்லாவில் இந்திய படைகளுக்கும் காஷ்மீர் விடுதலை இயக்கத்தினருக்குமிடையே நிகழ்ந்த சண்டைகளில் நாற்பது இந்திய துருப்பினர் கொல்லப்பட்டனர். இந்தியபடைகளிடமிருந்து ஏராளமான வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் விடுதலைஇயக்கத்தினர் கைப்பற்றியுள்ளனர்'' என்று ''காஷ்மீர் குரல்'' வானெலி அறிவித்துள்ளது,

வடக்கு ராஜௌரி என்னும் இடத்தில் நிகழ்ந்த கைகலப்புகளில் பன்னிரண்டு இந்திய துருப்புகளும் மற்றுமொரு பகுதியில் நடைபெற்ற கடும் சண்டையில் எழுபது இந்திய துருப்புகளும் பலியாகியுள்ளனர்'' என்றும் அந்த வானெலி அறிவித்துள்ளது.

**புரட்சிசபை எச்சரிக்கை**

''வெற்றி கிடைக்கும் வரை காஷ்மீர் விடுதலை இயக்கத்தினர் தொடர்ந்து போராடி வருவார்கள்'' என்று காஷ்மீர் புரட்சி சபையினர் அறிவித்துள்ளனர்.

**ஆதரவு கிடைக்கும்**

காஷ்மீரில் போராடிவரும் விடுதலை இயக்க சகோதரர்களுக்கு தேவைப்படின் அஜாத் காஷ்மீர் மக்கள் ஆதரவளிப்பார்கள் என்று [illegible] அறிவித்துள்ளார்.

## விண்வெளி வீரர்கள் பாதையை மாற்றினர்

### "ஜெமினி - 5"ன் சாதனை

வாஷிங்டன், ஆக. 24

திட்டமிட்டபடி, அமெரிக்காவின் 'ஜெமினி-5' விண்வெளிக் கப்பல் தனது சுற்றுப்பாதையை மாற்றி ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளது.

'ஜெமினி-5' விண்வெளிக் கப்பல் இப்பொழுது வான வெளியில் திட்டமிட்டபடி செயல்படுகிறது. கற்பனை ராக்கெட் ஒன்றைச் சந்திக்கும் நான்கு முயற்சிகளில் முதலாவது முயற்சியில் இக்கப்பல் வெற்றிகண்டிருக்கிறது.

மூன்ருவது நாளாகப் பூமியை வலம்வந்துகொண்டிருந்த விண்வெளி வீரர்கள் இருவரும் நேற்றுப் பூமியிலுள்ள கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகளின் கட்டுப்பாடுகளுக்கிணங்க, விண்வெளிக்கப்பலில் இருந்தவாறே தங்களின் சுற்றுப் பாதையை மாற்றி, மாற்றுத் திசையிலிருந்த (சில மைல் தூரத்தில்) கற்பனைச் செயற்கைக் கிரகத்தை அடைந்தனர். இது பெரியதொரு சாதனையென்று விஞ்ஞானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

**பூமியைக் கண்டனர்**

விண்வெளி வீரர்கள் இருவரும் நேற்று பூமியைக் கண்டனர். கென்னடிமுனை, தென்னமெரிக்கா, ஆஸ்திரேலியா நகரங்களை விண்வெளிவீரர் கூப்பர் நேற்றுப் பார்வையிட்டார்.

திட்டமிட்டபடி எட்டு நாட்கள்வரை 'ஜெமினி-5' வான்வெளியில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமன்னார் - தனுஷ்கோடி

# கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்குக

## இ. தொ. கா. மன்னார் மாவட்டக்கமிட்டி கோரிக்கை

மன்னார், செவ்வாய்

தற்பொழுது நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் தலைமன்னார்-தனுஷ்கோடி கப்பல் போக்குவரத்துச் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இந்திய அரசாங்கத்தையும் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷ்னரையும்கோருவதென்று அண்மையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மன்னார் மாவட்டக் கமிட்டியின் செயற் கமிட்டிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம், இங்குள்ள இந்தியர்களை இந்தியாவுக்குத் திருப்பிஅனுப்பும்வரை பதினைந்து வருட காலம் வரை நீடிக்காது இருவருடங்களுக்குள் செய்து முடிக்கு மாறும் இக்கமிட்டி கோரியுள்ளது.

கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:-

தலைமன்னார்— தனுஷ்கோடிக்கப்பல் சேவை புயலுக்குப் பின்னர் நிறுத்தப்பட்டிருப்பது குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவிப்பதோடு இந்திய அரசாங்கம் இதன் சேவையை மீண்டும் தலைமன்னாருக்கும் — மண்டபத்திற்குமிடையே நடத்தும்படி மத்திய கமிட்டி கோருகிறது. இதன் விளைவாக இரு நாடுகளுக்கு மிடையேயுள்ள கலாச்சாரத் தொடர்புகள் ஸ்தம்பித்தும், தபால் போக்கு வரத்தில் தாமதமும், இருஅரசாங்கத்துக்கும் பொருள் நஷ்டமும் ஏற்படுவது குறித்து இக் கமிட்டி ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துள்ளது.

எமது மாவட்டத்தில் கள்ளக்குடியேற்றம் அதிகரித்துள்ளபடியால் ஏற்கனவே எமது மாவட்டத்தில் வாழ்ந்துவரும் இந்திய வம்சாவளியினருக்கு இடையூறு வரவிருப்பதாக விருப்பதால் இதை உடனடியாக நிறுத்த சகல அங்கத்தவர்களுக்கும், பொது மக்களும் அப்பகுதிகளில் வரும் புதிய நபர்களை கண்டுபிடித்து உடனடியாக அப்பகுதி பொலிஸாருக்கும், கிராம சேவையாளருக்குத் அறிவிக்கும்படி இக்கமிட்டி கோருகிறது.

இலங்கை—இந்திய ஒப்பந்தம் விரைவில் அமுல் நடத்தவிருப்பதால் ஏற்கனவே 1949-ம் வருட இந்திய பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டப்படி மனுச் செய்து அற்ப காரணங்களுக்காக மறுக்கப்பட்ட அனைவருக்கும் பிரஜாவுரிமை அளிப்பதில் முதலிடம் கொடுக்கப்படவேண்டுமென்றும் தற்பொழுது விண்ணப்பிக்கும் மனுக்களை அடுத்தபடியாக கவனிக்க வேண்டுமென்றும் இந்தியப்பிரஜையாக பதிவுசெய்யப்படும் நபர்களுக்கு போக்குவரத்து வசதி செய்து தரப்படவேண்டுமென்றும், இக்கமிட்டி கோருகிறது.

இக்கூட்டம் திரு, வேலுச்சாமி தலைமையில் நடைபெற்றது. இவ்வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்-திரு. குருஸ், உபதலைவர்-திரு. ஷண்முகம், காரியதரிசி- ஜனூப் பாச்சா, உபகாரியதரிசி- திரு.முத்துராமன், தனாதிகாரி- திரு. முத்தையாசெட்டியார், மற்றும் 20 கமிட்டி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

### மாதர் சேவா சங்கம்

தலைவி-திருமதி செபஸ்தி அன்னம்மாள், உபதலைவி: திருமதி மரியமங்களம், காரியதரிசி-திருமதி இ.முனியம்பாள், உபகாரியதரிசி: திருமதி மு.வீரம்மாள், தனாதிகாரி-திருமதி ச,ஆரோக்கியம்மா, மற்றும் 5 செயல் கமிட்டி அங்கத்தவர்களாக திருமதி ஆ,நாகம்மாள்,திருமதி ஏ.தவமணி,திருமதி கதிரினுள் அருள்வாசகம்,திருமதி மீனும்பாள்சுந்தரம், திருமதி பரிமளம்பெருமாள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## கடத்தல் பொருட்கள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், புதன்

தகவல் கிடைத்ததன் பேரில் இலங்கை கடற்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் ஏ. ஐ. ஜெயவர்த்தன தலைமையில் சென்ற கோஷ்டி கச்சைதீவிற்கு சென்று தீவிலுள்ள சில பற்றைகளைத்தேடியபொழுது அங்கே இரண்டு சாக்குகளுக்குள் இமிட்டேஷன் காப்புக்களும் சீட்டாட்டபக்கெற்றுகளும், விரல்களுக்கு போடும் நகபசையும், தங்கமுலாம் பூசிய சங்கிலிகளும் இருக்கக்கண்டனர்.

இவைகளை 15,000 ரூபாவிற்கு மதிப்பிட்டுள்ளார்கள் இப்பொருட்களை சுங்க பகுதியைச் சேர்ந்த சப்கலெக்டர் திரு எம் வீரசுந்தரம் முன்னிலையில் விசாரணைக்காக கடற்படையினர் சமர்ப்பித்தனர் விசாரணை முடிந்த பின்னர் திரு எம் வீரசுந்தரம் யாழ் அரசாங்க அதிபரிடம். இப்பொருட்களை ஒப்படைத்தார் பெடுட்களை பறிமுதல் செய்யும்படி அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்

இப்பொருட்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்ட பொருட்களாக கூறப்படுகிறது

## மந்திரியைச் சந்தித்தனர்

திருகோணமலை, புதன்

ஸ்ரீலங்கா ஜாதிகுரு சங்கத்தைச் சேர்ந்த தனிப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியரின் குழுவொன்று சங்கத்தலைவரான திரு. வில்பிரட் பெரேராவின் தலைமையில் கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையைப் பேட்டிகண்டு தம் கஷ்டங்களை எடுத்துரைத்தனர். ஆசிரியர்கள் எல்லாப் பிரச்னைகளுக்கும் பொறுப்பாளிகள் அல்ல எனத் தெரிவித்த கல்விஅமைச்சர், தான் இக்குறைபாடுகளைத் தீர்த்து வைக்க ஆவனசெய்வதாகக் கூறினர்.

## செய்திச் சுருக்கம்

பதுளை, செவ்.

நியமன எம். பி. திரு. வி. அண்ணுமலை இம்மாதம் 28,29ம் திகதிகளில்மேலதிக புகைவண்டிகளை சேவையில் பதுளை மாத்தளை பகுதியில் ஈடுபடுத்தும்படி புகையிரதப் பகுதி அதிபரிடம் கோரியுள்ளார். இத்திகதிகளில் இ. தொ. காங்கிரசின் 21- வது ஆண்டுப் பொதுக் கூட்டம் மாத்தளையில் நடைபெறவிருக்கிறது.

∴ ∴ ∴

புசலாவ, செவ்.

ஜப்பானிய ஸ்தானிகர் கொழும்பிலிருந்து நுவரேலியாவிற்கு காரில் சென்று கொண்டிருக்கும் பொழுது புசலாவ என்ற இடத்தில் அவருடைய கார் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதன் காரணமாக கார் பலத்த சேதத்திற்குள்ளாகியது. ஸ்தானிகரும் அவருடைய சாரதியும் ஒருவித ஆபத்துமின்றி தப்பினர்.

ஃ ஃ ஃ

வியாங்கொடை, செவ்.

தொழிலாளர் சங்கத்திற்கும் துணி ஆலை கூட்டுஸ்தாபனத்தினருக்கும் ஏற்பட்ட தற்காலிக சமரச ஏற்பாட்டின் காரணமாக ஒன்பது நாட்களாக நடைபெற்று வந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

பதுளை, செவ்.

18 நாட்களாக பதுளை தொழில்நுட்பக் கல்லூரியில்நடைபெற்றுவந்த வேலை நிறுத்தம்தொடர்ந்து நடைபெறுகிறது, சதித் திட்டங்களை எதிர்த்தேஇந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது,

ஃ ஃ ஃ

காலி, செவ்.

விலைப்பட்டியலை மக்களின் பார்வைக்கு காண்பிக்காத இரண்டு வியாபாரிகளுக்கு காலி மாஜிஸ்திரேட் தலா 1000 ரூபா அபராதம் அல்லது ஆறுமாத கடுங்காவல் தண்டனை விதித்தார்.

ஃ ஃ ஃ

நிவித்திகலை, செவ்,

40 பக்கங்கள் கொண்ட கொப்பி ஒன்றை 15 சதத்திற்கு பதிலாக 20 சதத்திற்கு விற்றதற்காக இரத்தினபுரி மாஜிஸ்திரேட், விக்கிரமா என்பவருக்கு 750 ரூபா அபராதம் விதித்தார்.

## ஒப்பந்தமே காரணம்'

கோண்டாவில், புதன்

அண்மையில் பண்டத்தரிப்பு கிராம சபைத்தலைவர் பதவியிலிருந்து ராஜினுமாச்செய்த திருமதி பேளி அத்தனுசியார் விடுத்துள்ள அறிக்கையில், கனவான்கள் ஒப்பந்தத்தின் பேரிலேயே தாம் தலைவர் பதவியை ராஜினுமா செய்ததாகவும் வேறு காரணங்கள் எதுவும் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

---

சுழிபுரம், செவ்.

காரைநகர்-கோவளப் பகுதியில் நேற்று முன்தினம் வீசிய கடும் காற்றின் காரணமாக பலவீடுகள் சேதத்துக்குள்ளாகியுள்ளன. சேதமடைந்த வீடுகளை, வட்டுக்கோட்டை எம்.பி. திரு அ. அமிர்தலிங்கம் நேரில் சென்று பார்வையிட்டார்.

# 'தேசிய இனமாக வாழ பொருளாதாரம் அவசியம்'

உடுப்பிட்டி, செவ்

''1815ல் கண்டி உடன்படிக்கையில் கையொப்பம் இட்டவர்களில் ஸ்ரீமாவோவின் குடும்பத்தைச்சேர்ந்த ரத்வத்தை என்பவர் கன்னித்தமிழில் அழகாகக் கையொப்பம் இட்டுள்ளார். இவையெல்லாம் அன்று தமிழ்-சிங்கள இனங்களுக்கிடையே இருந்த அன்னியோன்யத்தை எடுத்துக் காட்டுகின்றன.'' என்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் (சீனச் சார்பு) தலைவர் திரு. சண்முகதாசன் வடமராட்சி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேஷ கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்.பிரதேசகம்யூனிஸ்ட் தலைவர் திரு. வி. ஏ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு.சண்முகதாசன் 'தேசிய இனப் பிரச்னை' என்னும் பொருள்பற்றிப் பேசினர். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''தமிழினம் பழங்காலந் தொட்டே இங்கு முன்னரேயே வாழ்ந்துவந்தாலும் இலங்கையைப் பொறுத்தவரையில் தேசிய இனமாக இன்னும் உருவாகவில்லை. ஆனல் தேசீய இனமாக வளரக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. ஒரே பிரதேசத்தில், ஒரே மொழி பேசி, ஒரே பண்பாட்டுடன் வாழ்பவர்களே தேசிய இனமாகக் கருதப்படுவர். தமிழ் மக்களின் பொருளாதாரமோ, வடக்கு, கிழக்குத் தவிர்ந்த பகுதிகளிலிருந்து எதிர்பார்க்கும் 'மணியோர்டர்' பொருளாதாரமாக உள்ளது. தமிழ்மக்கள் அனைவரையும் வடக்குக் கிழக்கில் வாழச்செய்து, வடக்குக் கிழக்கை வளம்படுத்திச் சுயமான பொருளாதாரத்தை மலரச்செய்த பின்னரே தமிழினம் ஒரு தேசீய இனமாக வாழமுடியும்.

மொழிப் பிரச்னை, அடிப்படையில் ஒரு பொருளாதாரப் பிரச்னையே. பொருளாதாரத்தை வளப்படுத்தினலன்றி மொழிப் பிரச்னை தீரப்போவதில்லை. சகல தொழிலாளிகளும் ஒன்றுபட்ட சோஷலிஸ சமுதாய அமைப்பிலேயே இப்பிரச்னைகள் தீரமுடியும்.''

## ஓய்வு பெறுகிறர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பிரதம போஸ்ட்மாஸ்டர் திரு, எஸ். முத்துக்குமாரு இன்று அரசாங்க சேவையிலிருந்தும் ஓய்வு பெற்றுக் கொள்ளுகிறர். அவர் கடந்த 40 ஆண்டுகளாக இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள தபால் திணைக்களங்களில் கடமையாற்றியிருக்கின்றர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறு வியாபாரிகளே பிடிபடுகின்றனர்

டம்புள்ள, செவ்

''பெரிய வியாபாரிகளும், மொத்த வியாபாரிகளும் விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களால் பிடிபடுவதில்லை. ஆனல் சில்லறை வியாபாரிகளே சிறு குற்றங்களுக்காகப் பிடிபடுகின்றனர். மொத்த வியாபாரிகள் கூடுதலான பொருட்களை விற்பதினுலேயே சிறு வியாபாரிகளும் ஒரு சதம் அல்லது இரண்டு சதம் கூட்டிப் பொருட்களை விற்கின்றனர்'' என்று முன்னுள் எம். பி. திரு. ஏ. யு: ரோமானிஸ் வர்த்தம மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸுக்கு அளித்த வரவேற்பொன்றில் குறிப்பிட்டார்,

சேவை

ஆண்டுகளாக
இலங்கையின் பிரபல
ஸ்தாபனம்

பெட்டா பார்மஸி
23, டாம் வீதி,
கொழும்பு.

தொலைபேசி: 7213
அல்லது எல்லாவித வைத்தியத் தேவைகளுக்கும் எம்முடன் நேரில் தொடர்பு கொள்க

தண்ணீர் சேவை

உங்கள் வீட்டிற்கு தண்ணீர் சேவை வேண்டியிருக்கிறதா? அப்படியானுல் உங்களுக்கு வேண்டிய ஆலோசனையையும், பொருட்களையும் சேவையையும் சிறந்த முறையில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். ஆலோசனை இலவசமாக கொடுக்கப்படும்.

நந்தி
இன்டஸ்ரீஸ் அன்ட் ஏஜென்சீஸ் லிமிட்டெட்,
20, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.
(தண்ணீர்சேவையாளர்)

மூட்டைப்பூச்சிகளை அழிப்பதற்கு
புதிய ஜெர்மன் மருந்து
பெயரெக்ஸ்
BAYTEX
Agents:
PHONE: 397 ROYAL DISPENSARY JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

நவீன
வீட்டுத்தளபாடங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

பெஷன்
பேணிஷிங் பலெஸ்

யாழ். நகரில்
சட்டுப் பணத்திற்கு
தளபாடங்கள்
கொடுக்கும்
ஒரே ஒரு ஸ்தாபனம்

பெஷன்
பேணிஷிங் பலெஸ்
5-7, ஸ்ரான்லி ரேட்,
யாழ்ப்பாணம்.


## புதியநிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

அண்மையில் நடைபெற்ற ஆவரங்கால் இளைஞர் விவசாயக்கழக பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் செ. ஆனந்தக் கதிரமலை. உப தலைவர் க. செல்வராசன், காரியதரிசி க. சபாரத்தினம். உபகாரிய தரிசி ந. ஆனந்தராசா. தனாதிகாரி தி. கமலநாதன். திரு. செ. சிவசம்பு, ந. வன்னியசிங்கம், ஆ. சச்சிதானந்தம், க. நடராசா, க. செல்வராசா ஆகியோர் உட்பட 10 பேர் நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர். திரு. சு. தம்பிராசா போஷகராகவும், கணக்குப் பரிசோதகராக திரு. மூ. ஆனந்தக்கிருஷ்ணரும் தெரிவு செய்யப்பட்டனர்.


## திருமண அழைப்பு

செல்வன்: கே. சிவராஜா B Sc

("வண்ணை சிவராஜா" ஆசிரியர், மகா வித்தியாலயம், சம்மாந்துறை)

செல்வி: வை. விமலநாயகி

நிகழும் 29-8-65 ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 முதல்9-00மணிவரையில்வரும்சுபமுகூர்த்தவேளையில் மணமகளில்லத்தில் இனிது நடைபெறஇருக்கும் திருமணவைபவத்திற்குஉற்ருர் உறவினர், நண்பர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

| மணமகளின் பெற்ருேர்: | மணமகனின் பெற்ருேர்: |
| --- | --- |
| திரு. கா. வைத்தியலிங்கம் தம்பதிகள் | திரு. வெ. சேனுதிராஜா தம்பதிகள் |
| 219/4, நாவலர் வீதி, (கடையிற்சுவாமி வீதி) யாழ்ப்பாணம். | 35/1, பிறவுண் வீதி நீராவியடி, யாழ்ப்பாணம். |

வரவேற்பாளர்: திரு. க. கீர்த்திசிங்கமும், பாரியாரும்

(மனேஜர், காங் புறுதிக் கூட்டுஸ்தாபனம் அவுனியா)
மணமகளின் சகோதரியும் கணவரும்



REGAL--JAFFNA
NOW SHOWING!
Pat Boone
in
NEVER PUT IT
IN WRITING


## சொற்பொழிவு.

யாழ்ப்பாணம், புதன்

வவனியா நகரசபை மண்டபத்தில் இன்று மாலை திரு அ.ச. ஞானசம்பந்தன் 'திருத்தொண்டர்புராணம்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவர்ற்றுவார்.


இன்று முதல் மகத்தான ஆரம்பம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 10-30
சனி ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ் ராஜேந்திரன்
கே. ஆர். விஜயா
நடிக்கும்

கைகொடுத்த
தெய்வம்

ராஜா (யாழ்ப்பாணம்)

ஆறறிவு படைத்த மனிதன் தன்னினத்தைச் சார்ந்தவனையே மிருகமாகக் துணியும் போது எழும் உரிமைக் குரல்தான் "நானும் மனிதன்தான்"

விஜயபுரி வீரன் புகழ் ஆனந்தன்-சந்திரகாந்தா
பாண்டி செல்வராஜ், ஷீலாதேவி, அசோகன், நாகேஷ்
கண்ணன், ஓ. ஏ. கே. தேவர் நடிக்கும்

ஆனந்த மூவிஸ்

நானும் ஒரு மனிதன்தான்


## 'மாணவர்களை அடித்து பயமுறுத்தாதீர்'

சாவகச்சேரி, செவ்.

''அன்பினால் உலகத்தை வெல்ல முடியுமென்ற வாக்கின் அடிப்படையிலேயே இன்றைய கல்வி போதிக்கப்படுகின்றது. எனவே மாணவர்களை அடித்துப் பயமுறுத்தி கல்வி புகட்டுவதைத் தவிர்த்து ஆசிரியர்கள் அன்பாகவும் ஆதரவாகவும் கல்வி கற்பிக்கவேண்டும்'' என்று வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் சரசாலை சரஸ்வதி வித்தியாசாலை பெற்ருேர்தின விழா பரிசளிப்பு வைபவத்தின்போது பிரதம அழைப்பாளராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினுர். இந்த வைபவத்திற்கு சாவகச்சேரி எம். பி, திரு. வி. என். நவரத்தினம் தலைமைவகித்தார்.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''ஒரு பாடசாலைக்குப் பல பிரச்னைகள் இருக்கலாம். அவற்றை உடனுக்குடன் நிவிர்த்தி செய்வது கடினம். ஆயினும் ஆசிரியர்களின் உதவியுடன் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்க்கலாம். முக்கியமான தேவையை நிவிர்த்தி செய்வதே அரசாங்கத்தினுடைய கடமை.

சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினம் பேசுகையில், ஒரு பாடசாலையின் முன்னேற்றத்தில் ஆசிரியர்களைவிட பெற்ருேர்கள் முக்கிய பங்கு வகிக்கிருர்கள் என்ருர்.

வட்டார வித்தியாதரிசி திரு. க. கனகசபாபதிஉட்பட வேறு பலரும் சொற்பொழிவாற்றினர்.

திரு. தணிகாசலம் பரிசு பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினுர். முடிவில் மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## கோபுரமணிஏற்றுவிழா

சங்கரத்தை, செவ்.

கடந்தசனிக்கிழமை காலை சங்கரத்தையில் இருக்கும் முருகமூர்த்தி கோவிலில் கோபுரமணி ஏற்று விழாவும் விசேஷ அபிஷகமும் நடைபெற்றன. இக்கோவில் மணி கடந்த சில ஆண்டுகளாக பழுதடைந்து இருந்தது. இதை திருத்துவதற்காக பணத்தை திரு. அ. தில்லையம்பலம் கொடுத்து உதவினுர். இறுதியில் நா. கணபதியின் உபயமாக அன்னதானம் வழங்கப்பட்டது.




## கொழும்பு

புதன் 25-8-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 இஸ்லாமியகீதங்கள், 7-45 நல்லூர் தேர் த்திருவிழா அல்சல்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவு, 5-45 படப் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கவிதைமஞ்சரி, 7-30 உங்கள் பிரச்னை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 [illegible] விருப்பம்.


## வரி விளம்பரம்

### கல்வி

கரவெட்டி, வாணி கலைக் கழகத்தின் ஆதரவில் வர்த்தக கல்வி நிலையத்தில் பாலபண்டித, பண்டித வகுப்புக்கள் இலவசமாகப் போதிக்கப்படும். நேரில் தொடர்பு கொள்க. வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 916

### வைத்தியம்

சலரோகம், தொய்வு, வாதம், கிரந்தி, தீட்டு இறைத்தல், புத்திரப்பேறு. தகுந்த முறையில் வைத்தியம் செய்பவர். பொ. செல்லையா, வைத்தியர், கந்தர் மடம், யாழ்ப்பாணம். 730

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் 153 D இலக்க காணி சிறிய வீடுடன் (ஒன்றரைப் பரப்பு) விற்பனைக்குண்டு. பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரி, ஸ்ரேசன் முதலியனவற்றிற்கு அருகாமையில். விபரங்களுக்கு: ஏ. எஸ். கனகரத்தினம். 6/A, சீனியர் லேன், வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம். 919

### தையல் மெஷின்

புதிய 'அரஸ்கோ, தையல் மெஷின் மின்சார சக்தியினுலும், தானுகவும் இயக்கக் கூடியது. நேரில் எந்நேரத்திலும் பார்வையிடலாம். 15-ம் நம்பர், காமெல் வீதி, யாழ்ப்பாணம். 925

### தேவை

கைத்தறி நெசவு செய்வதற்கு ஆண் தொழிலாளர் தேவை. மூன்று வருடத்திற்கு மேல் அனுபவம் உள்ளவராக இருத்தல்வேண்டும். தங்குவதற்கு இடவசதியும் சாப்பாட்டு வசதியும் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும். நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். சி. அரியராசா, மருதங்கேணி, செம்பியன்பற்று. 924


## அங்குரார்ப்பணக் கூட்டம்

உடுப்பிட்டி, செவ்.

''கல்லூரிகளில் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் மாணவர்கள் அக்கல்வியில் சிரத்தை எடுப்பதாகத் தெரியவில்லை. எனவே கிராமங்களிலுள்ள சனசமூக நிலையங்களும், அறநிலையங்களுமே சமயத்தை வளர்க்க வேண்டும்'' என்று வதிரி உப தபாற்கந்தோர் அதிபர் திரு. கே. ஆறுமுகம், வதிரி சனசமூகநிலைய மாணவர் தேர்ச்சிச் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் கூறினுர்.

ஆசிரியர் ஆ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றஇவ்வைபவத்தில்திரு ஆறுமுகம் மேலும்பேசுகையில், மாணவர் இப்படிச் சனசமூகநிலைய மன்றங்களில் சேர்ந்து எதிர்காலத்தில் சிறந்த மேடைப்பேச்சாளர்களாகவும், நாடக நடிகர்களாகவும், சங்கீத விற்பன்னர்களாகவும் வர வேண்டுமென்று சொன்னுர்.

மேற்படி சங்கத்தின் சார்பில் பிரதி வெள்ளிக்கிழமையும், அருகிலுள்ள மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனையும், விசேஷ ஆராதனைகளும் நடாத்துவதென்றும், பிரதி வெள்ளிக்கிழமையும் இதே ஆலயத்தில் சிறந்த சொற்பொழிவாளர்களை ஒழுங்கு செய்து அவர்களின் கருத்துரைகளைக் கேட்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்; போஷகர் திரு. ஆ. இராசரத்தினம், தலைவர்: செல்வன் வ. குலசிங்கம், உபதலைவர்: செல்வன் த. இரத்தினகுமார், செயலாளர்: செல்வன்க. இராதாகிருஷ்ணன், உபசெயலாளர்: செல்வன் க. மகேஸ்வரன், பொருளாளர்: செல்வன் தி. விஜயகுமார், உபபொருளாளர்: செல்வன் ம. நந்தகுமார். 9பேர்கொண்ட நிர்வாகசபைக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

ஒட்டாவ, ஆக. 23

கனடாவிலுள்ள வன்கூவரில் நடைபெறவிருக்கும் 8-வது சர்வதேச திரைப்பட விழாவுக்கு சத்யஜித்ரேயின் ''சாருலதா'' அனுப்பப்படவிருக்கிறது.

## "விவசாயிகளுக்கு அதிக உதவிகள்"

பளை, செவ்.

கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பொதுமக்களுக்கு கடன் உதவி, விவசாயப் பொருள் உதவி வழங்கி வருகிறது. பொது மக்களும் கூட சங்கங்களில் அங்கத்தவர்களாகவேண்டும். பொதுமக்கள் பொருட்களை தனியார் கடைகளில் பெருது எமது சங்கப் பண்டசாலைகளில் பெறுவதால் சங்கம் அபிவிருத்தியடைய உதவுவீர்கள். சமாசம் அபிவிருத்தியடைவதால் அங்கத்தவர்களுக்கு வேண்டிய பணத்தை குறைந்த வட்டி வீதத்தில் சங்கம் கொடுத்துதவும். விவசாயப் பொருள்களையும் கூட கடனுகப் பெறுதல் முடியும். ஒவ்வொரு விவசாயிகளும் தாம் விருத்தி செய்த விவசாய விளைபொருள்களை எமது சங்கத்திடம் கொடுத்தால் சங்கம் பெறுமதியான பணத்தைக் கொடுக்கும். இவ்வாறு செய்வதால் எமது சங்கம் வளர்ச்சியடையும்.

இவ்வாறு பளை ஸ்தான பாடசாலையில் நடைபெற்ற பச்சிலைப் பள்ளிப் பகுதி ப. நோ. கூ. சங்கங்களின் வருடாந்த ஆய்வு வகுப்புக்கு தலைமை தாங்கி சொற்பொழிவாற்றிய கூட்டுறவுப் பகுதி சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு, சபாரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நிர்வாக சபையின் கடமைகளையும், உரிமைகளையும், கடன் மனுக்கள் செய்யும் வகையையும், சங்கங்களில் கணக்குகள் வைக்கும் முறைகளையும், அங்கத்தவர்களது கடமைகளையும், அதிகாரம், உரிமைகவி என்பவற்றைப் பற்றி ரின்வாக எடுத்துக் கூறினுர்.

## விடுதலை பெற்ற இலங்கையர்

மன்னுர், செவ்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர் எனக் கருதப்படும் மூன்று பேர்கள் நேற்று இராணுவ அதிகாரிகளால் பேசாலையில் கைதுசெய்யப்பட்டு மன்னுர் பொலிசாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிசாரின் விசாரணையின் போது கைதுசெய்யப்பட்டவர்கள் இலங்கையர் என்றும் கிண்யா கிராமத்திலிருந்து மன்னுர் பகுதிக்கு மீன் பிடிப்பதற்காக வந்துள்ளார்களென்றும் தெரிய வந்தது. மன்னுர் பொலிசார் அவர்களை விடுதலை செய்து ஒரு காரில் அனுப்பிவைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ்

# நாவற்குழி கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், செவ் நாவற்குழி கொலைவழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தில் நீதியரசர்டாக்டர் எச். டபிள்யூ தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில், நாவற்குழியை சேர்ந்த நாகநாதர் பொன்னையாவை 64-ம் ஆண்டு டிசம்பர் 28-ம் திகதி பொல்லால் அடித்துக் கொலைசெய்ததாக விநாசி பொன்னையா என்பவர்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் வழக்கறிஞர் எஸ். நாகராசா, திரு. பி. ரி. ஜி, பிரிட்டோவின் அனுசரணையுடன் ஆஜரானுர். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் எஸ். ஸ்ரீநிவாசன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரியதரப்பில், வழக்கறிஞர் திரு. டி. டபிள்யு. அபயகோன் ஆஜரானுர்.

சட்டவைத்திய அதிகாரி திரு. செ. சிவஞானசுந்தரம் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

பொன்னையாவின் உடலைப் பரிசோதனை செய்தேன். 65-ம் ஆண்டு ஜனவரி 2-ம் திகதி ஆஸ்பத்திரியில் பிரேதபரிசோதனை நடைபெற்றது. காலஞ்சென்றவரின் சடலத்தை சின்னம்மா வேலுப்பிள்ளை, ஐயாத்துரை ஆகியோர் அடையாளம் காட்டினர்.

டாக்டர் நல்லையா, டாக்டர் பரமதாசன் ஆகியோரும் சாட்சியமளித்தார்கள்.

மேல் விசாரணை 25-ந் திகதி புதன்கிழமை காலை 11-30 வரை ஒத்திபோடப்பட்டுள்ளது,

# 'அகங்காரத்தை ஒழிப்பதே உண்மையான சிவத்தொண்டு'

## பேராசிரியர் ஞானசம்பந்தன் பேச்சு

யாழ்ப்பாணம், செவ் ''இறைவனின் திருவடியை ஆதாரமாகக் கொண்டு இறைவனுடையஉருவத்தை கற்பனை செய்கின்ருன் பக்தன் இறைவனுடைய திருப்பாதம்தான் எமக்குச் சொந்தம் பாதம்தான் வேண்டும் என்ற தத்துவத்தை நாம் கடைப்பிடிப்போமேயானுல் அருளமுதத்தை நாம் இலகுவில் அடைய முடியும்' என்று நேற்று மாலை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சென்னை அரசாங்க தமிழ் வெளியீட்டுத்துறை தலைவரான பேராசிரியர் அ ச ஞானசம்பந்தன் பேசுகையில் கூறினுர்

''இறைவன் அழகிய மணவாள கோலத்துடன், சற்றும் அழகில்லாத யானைத் தோலையும் போர்த்தியுள்ளார் இது எதை அறிவுறுத்துகிறதென்ருல் மாறுபட்ட பொருளுடன் தான் ஒற்றுமைப்பாடு ஏற்படுகிறதென்பதையே நாம் என்று இறைவழிபாட்டை கைவிடுகின்ருேமோ அன்றே சைவத்தை மறந்தவர்களாவோம் என்றும் அவர் கூறினுர்

கோவிலுக்குப் போவது ஆண்டவனின் அருளைப்பெற வேதவிர வீணுக அங்கு காலம் கழிக்கவல்ல இறைவனின் சந்நிதானத்தில் எமக்கு வேறு எண்ணங்கள் தோன்றக்கூடாது இன்றெல்லாம் நாம் கோவிலுக்குச் சென்று பார்த்தால் அங்கு திருத்தொண்டு செய்தவர்களின் பெயர்கள் கல்வெட்டுகளில் பதிந்திருப்பதைக்காணலாம். இது தற்புகழ்ச்சிக்காகவே செய்யப்படுகிறது என்பதை நாம் உணரவேண்டும். தொண்டு செய்யும் ஒருவன் ''நான் செய்கிறேன்'' என்ற அகங்காரத்தை முதலில் ஒழிக்க வேண்டும். அதுவே உண்மையான சிவத்தொண்டாகும். அகங்காரத்துடனே அல்லது தற்புகழ்ச்சிக்காகவோ செய்யும் தொண்டு அவத்தொண்டாகும். போட்டி மனப்பான்மையுடன் செய்யும் தொண்டு நிலை பெருது என்றும் அவர் கூறினுர்

''ஈழமும் பாரதமும் கடலினுல் பிரிந்திருப்பதனுல் தான் இன்று ஈழத்தில் சமய வளர்ச்சியும், தெய்வீக நம்பிக்கையும் வளந்து வருகின்றது நாம் ஒன்ருகச் சேர்ந்திருந்தால் நம் நாட்டில் ஓர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதற்கு எவ்வளவு கஷ்டப்படுகின்ருேமோ அதே சூழ்நிலை தான் இங்கும் ஏற்பட்டிருக்கும் இங்கு மக்கள் சைவசமய வளர்ச்சிக்குக் காட்டும் ஆர்வத்தைக் கண்டு நான் பெருமிதம் அடைகின்றேன்'' என்றும் அவர் கூறினுர்

இக்கூட்டத்துக்கு சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமை வகித்தார்

## துணிகள் விலை குறையும்

கொழும்பு, திங்கள் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் விற்பனை செய்யும் பல ரகமான துணிகளின் விலைகளும் விரைவில் குறைக்கப்படவிருக்கின்றன அநேகமாக அடுத்த மாதம் முதல் திகதியிலிருந்து இந்த விலைகள் குறைக்கப்படலாமென நம்பப்படுகிறது.

பப்ளின் துணிகள், பப்ரிக் துணிகள் ஆகியவை உட்பட இருபது ரக துணிகளின் விலைகள் குறைக்கப்படும்

## மேயர் உத்தரவு

கொழும்பு, திங்கள் ஸ்தலஸ்தாபன சேவை கமிஷனின் சட்டங்கள் எதிலும் கலந்துகொள்ள வேண்டுமென்று கொழும்பு மாநகரசபையின் இலாகா தலைவர்களுக்கும் மாநகர சபை கமிஷனர் திரு பி ஏ ஜயசிங்காவுக்கும் கொழும்பு மேயர் திரு வின்ஸன்ட் பெரேரா அறிவித்துள்ளார் புதிய உத்தரவுகளுக்கிணங்க, கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனின் சட்டத்தை மாநகர சபை பகிஷ்கரித்திருந்தது

கார்ட்டும், ஆக. 23 தெற்கு சூடானில் அரசாங்க துருப்புகளுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்குமிடையே நேற்று நடைபெற்ற சண்டையில் 14 கிளர்ச்சிக்காரர்கள் கொல்லப்பட்டனர்.

## இரு தரப்பிலும் 892 பேர் பலி

புதுடில்லி, ஆகஸ்ட் 23 காஷ்மீர் சண்டையில் 6 அதிகாரிகள் உட்பட 374 பாகிஸ்தானியரும் 400 இதர ஊடுருவல்காரர்களும் இதுவரை கொல்லப்பட்டனர் என பாதுகாப்பு மந்திரி திரு சாவன் இன்று லோக சபையில் அறிவித்தார் மொத்தம் மாண்டவர் 774 பேர் 90 பேர் சிறைப் பிடிக்கப்ட்டிருக்கிருர்கள்

இந்தியத் தரப்பில் 89 ராணுவ வீரர்களும், 29 பொலிசாரும் ஆக மொத்தம் 118 பேர் மாண்டதாக அவர் கூறினுர்.

## பஜனை கோஷ்டி

யாழ்ப்பாணம், செவ்வாய் சுன்ஞகம் கதிரமலை சிவன் கோவிலிலிருந்து சுன்ஞகம் திவ்யஜீவன சங்கத்தின் சார்பில் நடைபஜனை கோஷ்டி ஒன்று நல்லூர் தேர்த்திருவிழாவை முன்னிட்டு புதன்கிழமை அதிகாலை 4 மணிக்குப் புறப்படவிருக்கிறது.

முத்தமிழ்மணி சி எஸ் எஸ் மணிபாகவதர், வித்துவான் சி கே ஆறுமுகம், சங்கீதபூஷணம் ப முத்துக்குமாரசாமிசர்மா ஆகியோர் பஜனையில் கலந்துகொள்வார்கள்

## செனட்சபை

பம்பலப்பிட்டி, செவ். இன்றுசெனட்சபை கூடும் போது மரணதண்டனையை ஒழிக்கக் கோரும் பிரேரணையை செனட்டர் டி. ஈ. வி. திசநாயக்கா பிரேரிப்பார்.

## வாக்கெடுப்பு

பம்பலப்பிட்டி, திங்கள் இரண்டாவது பட்ஜட் வாசிப்பின் வாக்கெடுப்பு 26ந் தேதி வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு நடைபெறும். பட்ஜட் சமர்ப்பித்த பின்னர் தொடர்ந்து 3 நாட்கள் பாராளுமன்றத்தில் இதுபற்றிய விவாதம் நடைபெற்றுள்ளது.

## பின்போடப்பட்டுள்ளது

பம்பலப்பிட்டி, திங்கள் கொழும்பு விவேகானந்த சபை அகில இலங்கைச் சைவசமய பாடப்பரீட்சை 18-ம் திகதி செப்டம்பர் மாதம்வரை பின் போடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
தொண்டு செய்வதற்கு எவ்வளவு பேர் முன்வரத் தயார்? தமது வாழ்க்கையையே மக்களின் அருட்பணிக்காக அர்ப்பணித்து இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற நித்யானந்த நிலையில் வாழும் பல புனிதர்களை அங்கு காணமிகு ஆனந்தம். அங்கிருந்து திரும்பவே மனமில்லை என்ருர் ஓர் அன்பர். உண்மை தான்.

∴ ∴

மூவிருமுகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள்கள்போற்றி
காஞ்சிமா வடிவைகுஞ்
செவ்வேள் மலரடி
போற்றி அன்னுன்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி.

— கந்தபுராணம்.

## நல்லை முருகனின் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
நம்பினேரைப் புரந்து முழுதருட்பரிசிலீயும் பெருமான்.

எத்தகைய பெரிய கொடியோரும் செவ்வேள் திருமுனஞ்சென்ருல் பணியும் அன்பும் அவர் உள்ளத்தைக் கவர்ந்துவிடும். நல்லைக் குமரநாயகனை நாம் வணங்காத நாட்கள் பிறவாத நாட்களாகவே முடியும். பல அன்பர்களின் மணியோசைப் பெரும்பணி அடியார்களை அழைக்கும் உயர்வு நல்லையிலுண்டு. ஒரு காலத்தில் செல்லப்பசாமிகள் நல்லை முருகனருளில் திளைத்து ஆங்கே இருந்து இன்பநெறி கூட்டினுர். யோக சுவாமிகள் செல்லப்ப சுவாமிகளின் அருள் பெற்றவர்கள். யோக சுவாமிகளின் நற்சிந்தனை அன்புக்களஞ்சியம். இங்கே குமர குருபரர் பாசுரம் ஒரு காட்டி இதனை நிறைவு செய்வாம்.

ஒழியாத புவனத்து
உயிர்க்குயிரதாய் நிற்ப
தொருதெய்வ முண்டென
வெடுத
துரையால் உணர்த்துவதை
யொழிய எவரெவர்கட்கும்
வான்கண் உளக்
கண்ணதாம்
விழியாக முன்னின்று
தண்ணளி சுரந்தவர்கள்
வேண்டியவரங்கொடுப்
பான்
மெய்கண்டதெவம் இத்
தெய்வமல்லாற் புவியில்
வேறில்லையென்றுணர்ந்
தியர்.
பொழியாத புயல்தங்கு
புவன முந்திசை முகப்
புத்தேள்பெரும்புவனமும்
பொன்னுலகு மண்ணுலகு
மெவ்வுலகுவேண்டினும்
பொருளன் றிவற்கு மற்ற
அழியாத விருந்தரக்
கடவன் இவனுடன
அம்புலி யாடவாவே
அழகுபொலி கந்தபுரி
தழையவரு கந்தனுடன்
அம்புலி யாடவாவே.
முருகனருள் வாழ்க.


## கூட்டுறவுச் சங்க வருடாந்த மகாநாடு

பருத்தித்துறை, செவ் ''பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டுமக்களுக்கு நல்ல சேவைசெய்ய வேண்டுமானுல் சிறிய தொகையான கூப்பன்களுடன் இயங்கும் ஐக்கிய பண்டசாலைகளையும், தனிப்பட்டோரது கூப்பன்கடைகளையும் மூடியோ இணைத்தோபெருப்பித்தாகவேண்டும். சுமார் 2,000க்கும் அதிகமான கூப்பன்களை உடைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தான் நல்ல முறையில் நிர்வகிக்கப்படவோ, வியாபாரத்தை நடத்தவோ முடியும். இது விஷயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத்தவறினுல் கூட்டுறவு இலாகா பற்றிக் கூறப்படும் ஊழல்களை ஒழித்துவிட முடியாது.''

இவ்வாறு புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் 6ம் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப்பேசுகையில் மேற்படி சமாஜத் தலைவர் திரு. செ. மாணிக்கவாசகர் கூறினுர்.

சமாஜத்துக்கு இவ்வாண்டில் சுத்த லாபமாக 26,025 ரூபா 45 சதம் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டதுடன் சமாஜ ஊழியர்களுக்கு ஒருமாதச் சம்பளமான 1,852 ரூபா 50 சதம் சன்மானமாக வழங்குவதெனவும் தெரிவிக்கப்பட்டது.

விசைத் தறி நிலையம் அமைக்க முற்பகுதியாக 175 ஆயிரம் ரூபா முதலீடு செய்ய ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், இதனைப் பெறக் காலதாமதமாகுமென அறிவதால் முன்ஞேடியாக 10 ஆயிரம் ரூபா முதலீடுசெய்து கைத்தறி நெசவாலை ஒன்றை நிறுவுவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.




## புறப்படும் நேரங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ரயில் புறப்படும் நேரங்கள் வருமாறு:-

காலை 6-02 ''யாழ்தேவி'' 7-35 சாதாரண ரயில், மத்தியானம் — 2-25 ''யாழ்தேவி'', இரவு— 7-00 மெயில், ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் இரவு— 8-50 க்குகொழும்புக்குஒருவிசேஷ புகையிரதம் செல்லும்.

யாழ்ப்பாணத்தி லிருந்து பளைக்கு ரயில புறப்படும் நேரங்கள் வருமாறு:-

மத்தியானம் 1-20, மாலை 4-00 ரயில்கார், மாலை4-48, 5-50.

கிளிநொச்சிக்குகாலை 8-45 க்கும், அநுராதபுரத்துக்கு இரவு 8-50க்கும் யாழ்ப்பாணத்திலிருந்து ரயில்கள் புறப்படும்.

## வந்துசேரும் நேரங்கள்

கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேரும் நேரங்கள்:-

காலை 5-00 மெயில், மத்தியானம்—1-02யாழ்தேவி, மாலை—5-54 சாதாரண ரயில், இரவு—9-19 யாழ்தேவி.

பளையிலிருத்து புறப்படும் ரயில்கள் யாழ்ப்பாணம் வந்து சேரும் நேரங்கள்:-

காலை—6-50, 8-03, 8-41 (ரயில் கார்) இரவு—8-00.

அநுராதபுரத்திலிருந்துபுறப்படும்ரயில் காலை—10-30 க்கும், கிளிநொச்சியிலிருந்து புறப்படும் ரயில் மாலை 4-35 க்கும் யாழ்ப்பாணத்தைவந்தடையும்.

## நல்லூர் திருவிழா விசேஷ ரயில் வசதி

யாழ்ப்பாணம், புதன் நல்லூர்கந்தசாமிகோவில் தேர்த்திருவிழாவையும், தீர்த்தோற்சவத்தையும் முன்னிட்டு இலங்கைப் புகையிரதப் பகுதியினர் சகல இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் புகையிரதங்களுக்கு வழக்கமாக இணைக்கப்படும் பெட்டிகளை விடக் கூடுதலான பெட்டிகளை இணைத்துள்ளனர். கூடியளவு பிரயாணிகள் பிரயாணம்செய்யக்கூடிய விதத்திலேயே இவ்வேற்பாடு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கமான புகையிரதம் புறப்படும் நேரத்திலோ அல்லது வந்து சேரும் நேரதிலோ எதுவிதமான மாறுதல்களும் இருக்கமாட்டாது. வழக்கம் போலவே புகையிரதங்கள் புறப்படும் நேரமும் வந்துசேரும் நேரமும் இருக்கும்.

இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்துக்கு காலை வரும் புகையிரதங்களில் கூடுதலான பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கும்.

## நன்றிநவிலல்

எனது பௌத்திரர்களும், எனது ஜ்யேஷ்ட புத்திரனது புத்திரர்களும் ஆகிய சிரஞ்சீவிகள் ராகவன், பரமேஸ்வரன் ஆகியோரது உபநயன வைபவத்தில் கலந்துகொண்டவர்களுக்கும், ஆசீர்வாதச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பரிசில்கள் வழங்கியவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன். க. சு பரமேஸ்வரஐயர், ப. சுப்பிரமணிய ஐயர். 7, பழம் ரேட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 928

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25- திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org